[7th August 1963

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட ஆண்டுகளில் அகில இந்திய சராசரி தனி நபர் வருமானம் எவ்வளவு? நம்முடைய ராஜ்யத்தைவிட அதிகமாக இருக்கிறதா? குறைவாக இருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அகில இந்திய விகிதம் 28 சதவிகிதம். நமக்கு 32 சதவிகிதம்.

Blackmarketing in cement

* 28 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works will be pleased to state—

(*a*) how many cases of cement blackmarketing have been detected during the year 1961; and

(*b*) how many ended in conviction?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) & (*b*) Only one case of blackmarketing in cement was detected in Coimbatore district in the year 1961. The Subdivisional Magistrate, Erode, convicted the accused but the conviction was set aside on appeal.

கனம் திரு. வெ. ராமைய்யா : 1961-ம் ஆண்டிலே கோவை ஜில்லாவில் கள்ளச் சந்தையில் சிமிண்ட் விற்றதாக ஒரே ஒரு கேசு மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டது; ஈரோடு சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் குற்றவாளியைத் தண்டித்தார்; ஆனால் தண்டனை அப்பீலில் தள்ளிவிடப்பட்டது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : மாகாணம் பூராவும் சிமெண்ட் கள்ள மார்க்கெட்டும், கலப்படமும் மிக அதிகமாக இருக்கின்றன. அப்படியிருந்தும், ஒரே ஒருவர் மீது ஒரு வழக்குத்தான் போடப்பட்டிருக்கிறது என்று கூறப்பட்டது. இது போலீசாரின் திறமைக்கு அறிகுறியா? அல்லது, நிர்வாகத்தை நடத்தும் அமைச்சருடைய திறமைக்கு அறிகுறியா?

கனம் திரு. வெ. ராமைய்யா : இரண்டு பேருடைய திறமைக்கும் அறிகுறி அல்ல இது. இதைப் பார்க்கும்போது, பொது மக்களுடைய ஒத்துழைப்பு குறைவாக இருக்கிறது என்று நன்றாகத் தெரிகிறது. பற்றுக்குறை இருக்கும்போது, இது போன்ற சம்பவங்கள் நடக்கும்போது, அதிகாரிகளுக்கோ, அல்லது அரசாங்கத்திற்கோ இதுபற்றிய தகவல்களை பொது மக்கள் தெரிவித்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்தக் கேள்வி 1961-ஆம் வருஷத்தைப் பற்றியது. அந்த வருஷம் பல புகார்கள் விசாரணைக்கு வந்திருக்கலாம். என்றாலும், என்னிடம் இருக்கும் தகவலின்படி, இந்த ஒரு புகார்தான் விசாரணைக்கு வந்தது. தண்டிக்கப்பட்ட நபர் அப்பீலில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

திரு. எ. ஆர். சுப்பையா முதலியார் : மாவட்ட டெவலப்மெண்ட் கமிட்டி எல்லாவற்றிலும், இதே மாதிரி புகார் சொல்லப்படுகிறது. ஆகவே, அதற்கு ஏதாவது ஒரு குழு நியமித்து, என்ன

7th August 1963]

காரணத்தால் அம்மாதிரி தவறுகள் ஏற்படுகின்றன என்று கண்டு பிடித்து, அதற்கு ஏதாவது பரிகாரம் செய்ய முடியுமா என்பதைக் கவனிக்க அரசாங்கம் யோசிக்குமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இது சம்பந்தமாகக் கவனம் செலுத்தும்போது, குழு நியமித்தால் மட்டும் விவகாரம் ஒன்றும் தீர்ந்துவிடாது. இன்னும் கொஞ்சம் கண்காணிப்பு வேண்டும். அதைத்தான் அரசாங்கம் அதிகாரிகளிடத்தில் வற்புறுத்திக் கொண்டு வருகிறது.

திரு. கரு. சீமைச்சாமி : கள்ள மார்க்கெட்காரர்களைத் தூக்கி லிடவேண்டும் என்று பிரதம மந்திரி நேரு அவர்கள் கூறியிருக்கிறார். அப்படி யாராவது தமிழ்நாட்டில் தூக்கிலிடப்பட்டிருக்கிறார்களா ? இல்லையென்றால், சட்டத்தைத் திருத்தும்படி மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொள்ளுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தூக்கிலிடக்கூடிய கட்டம் இன்னும் வரவில்லை. 1961-ம் ஆண்டில் வந்த புகார் ஒன்று. அது விசாரிக்கப்பட்டு, தக்க ருசு இல்லாத காரணத்தால் அந்த ஒரு நபரையும் விடுதலை செய்திருக்கிறோம்.

திரு. கே. மூக்கையா தேவர் : சிமென்ட் கண்ட்ரோல் விஷயமாக, ஜனங்களுடைய ஒத்துழைப்பு இல்லாத காரணத்தால்தான், இம் மாதிரி சரியாக நடக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். தேவை இல்லாதவர்கள்கூட பர்மிட் வாங்கி வைக்கும் நிலைமை ஏற்பட்டிருப்பதால் கண்ட்ரோல் முறையை எடுத்துவிட்டுப், பழைய முறையைக் கையாள அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கண்ட்ரோல் இல்லாத முறையைக் கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறேன். இப்பொழுது சிமென்ட் பற்றாக்குறை அதிகமாக இருப்பது கனம் அங்கத்தினர்களுக்கு நன்றாகத் தெரியும். நாம் அனுசரிக்கும் முறை யார் யாருக்குத் தேவையோ, அவர்களுக்கு சிமென்ட் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதுதான். ஆனால், இதைத் தவறாகப் பயன் படுத்தக்கூடியவர்கள் ஏராளமான வழிகளைக் கண்டுபிடித்துப் பயன்படுத்துகிறார்கள். அப்படியில்லாமல், பொதுவாக, சிமென்ட் தேவை உள்ளவர்கள் மட்டும்தான் சிமென்ட் வாங்குவது என்ற முடிவுக்குப் பொதுமக்கள் வந்துவிடும் பட்சத்தில், கஷ்டம் இருக் காது. அரசாங்கத்தின் தேவை சற்று அதிகமாகியிருந்த காரணத் தால், சிமென்ட் அல்லாத மற்ற பொருள்களையும் அரசாங்கக் கட்டிட வேலைக்கு உபயோகிக்கவேண்டும் என்று முயற்சி செய்து, அதிலே கொஞ்சம் வெற்றியும் அடைந்திருக்கிறோம். பல இடங்களில் சிமென்டுக்குப் பதிலாக பழைய காலத்தில் கட்டிடங் கள் கட்ட உபயோகப்படுத்தியது போன்ற பொருள்களை உபயோகப்படுத்த வேண்டுமென்ற வகையில், கிராமப் புறங்களில்

[7th August 1963

கணிசமாக, எல்லா அரசாங்கக் கட்டிடங்களிலும் சிமெண்டுக்குப் பதிலாக சுண்ணும்பு வைத்துக் கட்டவேண்டுமென்று அரசாங்கம் வற்புறுத்துவதால், இந்த முறையில் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருவதையும் நாம் பார்க்கிரும்.

திரு. க. ர. நல்லசிவம்: 1961-62-ல் கண்டுபிடிக்கப்பட்ட கேஸ்களைவிட 1962-63-ல் கேஸ்கள் அதிகமாக இருக்கின்றன. சில குறிப்பிடத்தக்க மில்காரர்கள் கள்ள மார்க்கெட்காரர்களுக்கு ஆக்கம் கொடுப்பதாகத் தகவல் இருக்கிறதே, அது உண்மையா? அரசாங்கம் தீவிரமாக விசாரணை செய்து, எந்த இடத்திலும் கள்ள மார்கெட் ஏற்படாமலிருக்க தக்க நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதிலளிக்கலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ரீடெயில் டீலர்களை நியமிக்கும் அதிகாரம் யாருக்கு இருக்கிறது? அப்படி நியமிக்கப்படக்கூடிய ரீடெயில் டீலர்களுக்கு சிமெண்ட் கம்பெனியார் ஒதுக்கக்கூடிய சிமெண்ட் அனுப்பப்படுகிறதா என்று அமைச்சர் அவர்கள் விசாரித்ததுண்டா?

THE HON. SRI V. RAMAIAH: The licence is granted in the form prescribed in the Cement Control Order by the Director of Industries and Commerce, Madras.

அடுத்த கேள்விக்குத் தனிக் கேள்வி போட்டால்தான் பதில் சொல்ல முடியும்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: சிமெண்ட் ப்ளாக் மார்க்கெட்கள் சர்க்கார்த் துறையினர் எடுத்து நடத்தும் வேலையிலிருந்துதான் உற்பத்தியாகிறது என்பது உண்மையா? அதனுல்தான் வழக்குகள் கண்டுபிடிக்கப்படாமல் விடப்படுகின்றனவா?

கனம் திரு. வெ. ராமைய்யா: அந்தக் குற்றச்சாட்டை நான் முழுவதும் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. ஏனென்றுல், பல இடங்களிலிருந்து இந்தத் தவறுகள் நடக்கின்றன. அரசாங்க வேலைகளிலிருந்து சிறு தவறுகள் நடக்கலாம். இன்றைக்கிருக்கும் நிலையில், எல்லாம் 'பர்பெக்ட்' ஆக இருக்கிறது என்று நான் சொல்வதற்கில்லை. ஆனுல், பொறுப்பிலுள்ள அதிகாரிகள் இதில் அதிகமாகக் கவனம் செலுத்தவேண்டுமென்று ஒரு சில மாதங்களுக்கு முன் எடுத்த முடிவின்படி, இதில் ஏராளமான நன்மை ஏற்பட்டிருக்கும் என்பது என்னுடைய நம்பிக்கை.

திரு. இராம. அரங்கண்ணல்: மது விலக்குக் குற்றத்தைக் கண்டுபிடிப்பது போல், அந்தப் போலீசார் வசமே இந்தக் குற்றங்களையும்—கள்ள மார்க்கெட் வியாபாரம் நடத்துவது சம்பந்தமான குற்றங்களையும் கண்டுபிடிக்க அரசாங்கம் உத்தரவிடுமா?

7th August 1963]

கனம் திரு. வெ. ராமையா : போலீசார் மட்டுமல்ல, பொது மக்களும், இதுபோன்று கள்ள மார்க்கெட் செய்பவர்களைப்பற்றி போலீசார் இடத்திலோ, அரசாங்கத்தினிடத்திலோ தகவல் கொடுக்கும் பட்சத்தில், அரசாங்கம் சம்பந்தபட்டவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. சா. கணேசன் : இந்த அதிகாரத்தைக் கொடுப்பதிலே இருக்கிற சிரமத்தைச் சொல்லி, பொது மக்கள் தான் அதை மேற் கொள்ளவேண்டும் என்பது போல அமைச்சர் அவர்கள் குறிப்பிட் டார்கள். இந்தமாதிரி சிமெண்டு துறையில் இவ்வளவு தவறுகள் நடக்கின்றபோது, இதற்கென, குறிப்பிட்ட காலத்திற்காவது, ஸ்பெஷல் போலீஸ் போட்டுக் கண்டுபிடிக்கச் செய்து, நல்ல தண்டனை வாங்கிக் கொடுப்பதற்கு அரசாங்கம் துணிகரமாக முன் வந்தால்தான், தவற்றை ஒழிக்க முடியும் என்கிற கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

(திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் குறுக்கீடு)

கனம் திரு. வெ. ராமையா : 'ரிக்வெஸ்ட்' தான் பண்ணுகிறார்.

திரு. சா. கணேசன் : It is not a request.

"ஏற்றுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்" என்று சொன்னேன். 'அறிய விரும்புகிறேன்' என்று சொல்லியிருக் கிறேன்.

MR. SPEAKER : The hon. Member, Sri Swaminathan, takes the role of the Chair !

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் அவர்கள், விசேஷமாகக் கவனம் செலுத்தவேண்டும் என்கிற அவருடைய ஆலோசனையை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். அப்படி இல்லை, என்னுடைய முயற்சி எல்லாம், இதிலே ஏதோ ஒரு இலாகா அல்லது மற்றொரு இலாகா தான் அதிகமாகக் கவனம் செலுத்தவேண்டுமென்ற நிலை இல்லை. இதில் ஈடுபட்டிருக்கும் அத்தனை பேர்களும் ஒத்துழைப்பு கொடுத்தால் தான், இதில் இருக்கும் கஷ்டங்கள் தீரும். அதனால்தான் அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், இதில் எந்த இலாகா சம்பந்தப்பட்டிருக்கிறதோ, அதில் இருக்கக்கூடிய பொறுப்புள்ள அதிகாரிகள் இதில் அதிகமாகக் கவனம் செலுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, பஞ்சாயத்து யூனியன் போன்ற அமைப்புகள் இதிலே சற்று அதிகமாகக் கவனம் செலுத்தும் பட்சத்தில் இந்தக் குறைபாடுகள் பெருமளவுக்கு நீங்கும் என்பது என்னுடைய எண்ணம்.

திரு. ஆ. கு. சுப்பையா : சிமெண்ட் விநியோகிக்கும் அதிகாரம் தாசில்தார், ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் ஆகியவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்கள் செய்யக் கூடிய வேலைகள் எல்லாம் தேங்கிக் கிடக்கின்றன. ஆகவே,

[7th August 1963

பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவு, சிமெண்ட் விநியோகம் செய்வதற்குக் 'கோட்டா' ஒதுக்க அரசாங்கம் ஆலோசனை செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்பொழுதிருக்கும் விநியோக முறையை மாற்ற நான் தயாராக இல்லை. அரசாங்கம், ரெவினியூ இலாகாவின் மூலம் இந்த விநியோகத்தைச் செய்யும் காரணத்தால் ரெவினியூ இலாகாவினருக்கு ஓரளவு ஸ்தலத்திலுள்ள அனுபவம் இருப்பதால், ஸ்தலத்தில் இருக்கக்கூடியவர்களைப் புரிந்துகொள்ள முடியும். இந்தப் பொறுப்பை அதிகமான பேர்களுக்குப் பிரித்துக் கொடுத்தால் ஊழல்கள் இன்னும் சற்று அதிகமாகப் போகும்.

திரு. வை. சங்கரன் : ஒருசில இடங்களில் சிமெண்ட் விநியோகத்தில் ஊழல்கள் இருப்பதாகச் சொல்லப்படுவதால், இனி, யார் யாருக்கு எவ்வளவு 'அலாட்' செய்யப்படுகிறது, என்ன காரியத்திற்கு 'அலாட்' செய்யப்படுகிறது என்று பட்டியல் தயார் செய்து, பொது மக்களின் பார்வைக்கு வைப்பதற்கும், அதிகாரிகளல்லாதவர்களைக்கொண்ட ஒரு கமிட்டி மூலம் சிமெண்ட் விநியோகம் செய்யலாம் என்கிற மாற்று யோசனையையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இன்றைக்கிருக்கும் பற்றுக் குறையைக் கவனிக்கும்போது, யார் விநியோக முறையை ஏற்றுக் கொண்டாலும், புகார் இல்லாமலிருக்க முடியாது. நானபிஷியல் கமிட்டியைப் போட்டாலும் அவர்களும் நல்ல விதமாகச் செய்து விடுவார்கள் என்று என்னால் தைரியமாகச் சொல்ல முடியாது. இப்பொழுதிருக்கும் முறையில், சிக்கல்கள் நடைமுறையில் இருக்கும் பட்சத்தில், அவற்றை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அரசாங்கம் மறுபடியும் கவனம் செலுத்தித் தீர்த்து வைக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இப்பொழுது கள்ளச் சந்தையில் விற்கத்தக்க அவ்வளவு பற்றுக்குறை இருக்கும்போது, நேற்று பேசிய தொழில் அமைச்சரவர்கள், புதிய தொழிற்சாலைகள் ஏற்படுத்துவது . . . .

MR. SPEAKER : The hon. Member should not put the statement of another Hon. Minister to the Hon. Revenue Minister and ask for a reply. The hon. Member can ask for a reply on any facts but not on the statement of another Hon. Minister.

திரு. எஸ். ஜே. ராமசாமி : செமன்ட் உற்பத்தியைப் பெருக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

7th August 1963]

திரு. ஜே. மாதா கவுடர்: அமைச்சரவர்களுடைய புள்ளி விவரத்திலிருந்து தமிழ் நாட்டில் கள்ள மார்க்கெட்டு அடியோடு ஒழிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். ஆனல், அங்கத்தினர்கள் "கள்ள மார்க்கெட்டு, கள்ள மார்க்கெட்டு" என்று சொல்லி, கள்ள மார்க்கெட்டைத் தூண்டுபவர்களுடைய வாயைக் கட்ட ஏதாவது சட்டம் அரசாங்கம் கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

திரு. டி. கார்ச்சா கவுடர்: ஸார், பொதுவாக எந்த ஒரு பொருளும் கள்ள மார்க்கெட்டுக்குப் போகிறது என்ருல், அதற்கு பற்ருக்குறைதான் காரணம் என்று கொள்ளலாம். அப்படியாஞல், செமன்ட் பற்ருக்குறையை எந்த எந்த விதங்களில் ஒழிக்கத் திட்டம் இருக்கிறது, அந்த திட்டம் எந்த நிலையில் இருக்கிறது?

கனம் திரு. வெ. ராமைய்யா: இந்தக் கேள்வி நேற்றைய தினமே எழுந்து, கனம் தொழில் அமைச்சர் பதில் சொல்லி இருக்கிருர்கள். மீண்டும் அது பற்றி அவர்களிடமேதான் கேட்க வேண்டும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: ஸார், இப்பொழுது இருக்கும் முறையினல், முதலில் 5 டன் அளவுக்கு திட்டம் போட்டு, பிறகு டைரக்டர் ஆபீசுகளில் 30, 40 டன் என்று வாங்குவதால், ஏழைகள் 5, 10, 15 மூட்டைகள் கூட வாங்க முடியாமல் போய்விடுகிறது. ஆகையினல், அவர்கள் பிளாக் மார்க்கெட்டில் அதிக விலையில் வாங்கும் நிலைமை இருக்கிறது. அதை மாற்றி செமன்ட் வினியோகிக்கும் வேலையை பப்ளிக் ஒர்க்ஸ் எஞ்ஜினியரிடமோ, அல்லது மாவட்ட அதிகாரிகளிடமோ பூரணமாக கொடுக்க அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH: It is only a suggestion.

திரு. ஆர். ரங்கசாமி: ஸார், சிமென்டுக்கு ஸ்பெஷலாக பர்மிட் வாங்குகிறவர்கள், ஒரு தடவை வாங்குவதற்கு பதிலாக, வாங்கும் பொழுது பாக்டரியில் பதிவு செய்யாமல், பல தடவைகள் வாங்குகிருர்கள். அதைத் தடுக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிருர்கள்?

கனம் திரு. வெ. ராமைய்யா: கனம் அங்கத்தினர் அம்மாதிரி குறைகளை நேரிடையாக எழுதியனுப்பினல் கவனித்து தக்க நடவடிக்கை எடுக்க சாதகமாக இருக்கும்.

திரு. கி. இரா. சம்பந்தம்: இந்த சிமென்டு பர்மிட் வைத்திருக்கும் ஏஜெண்டுகள் பிளாக் மார்க்கெட்டில் விற்க புகுவதால்தான் பொது மக்கள் பாதிக்கப்படுகிருர்கள். ஆகவே அந்த ஏஜெண்டுகளை மாற்றி அமைக்க தக்க ஏற்பாடுகள் செய்யப்படுமா?

[7th August 1963

கனம் திரு. வெ. ராமையா : அதைப்போல தகவல் என்னிடம் வரவில்லை. தனிப்பட்ட முறையில் அங்கத்தினர் அம்மாதிரிக் குறைகளை கவனத்திற்கு கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை எடுக்க சௌகர்யமாக இருக்கும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : The present channel of distribution of cement to needs in the agricultural sector is not encouraging. Will the Government consider the desirability of opening some other agency for distributing cement to the agriculturists who need it more for erection of pumpsets, etc.?

THE HON. SRI V. RAMAIAH : The present system is more to help the needs of agriculturists. I am sure the agriculturists, as such, would be benefited by the present system. If there are any definite complaints in any area and if they are brought to my notice, I will look into them.

SRI A. RAGHAVA REDDI : So far as Chingleput district is concerned, I hear that there are thousands of applications which are being received from agriculturists and which are pending in the Taluk offices. Will the Hon. Minister do the needful and expedite the matter?

THE HON. SRI V. RAMAIAH : I do not think any special drive is required. If sufficient cement is made available to that particular Taluk Office, the requirements of agriculturists can be met.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, அரியலூரில் கள்ள வியாபாரி ஒருவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் பிடிக்கப்பட்ட பிறகு விடுவிக்கப்பட்டு இருக்கிறார்; பிடித்த அதிகாரிகள் மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்பது அமைச்சருக்குத் தெரியுமா? பிடிக்கும் அதிகாரிகள் இதனால் துணிவு இல்லாமல் இருக்கிறார்கள் என்பதும் உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் சொல்லும் சம்பவம் சம்மந்தமாக எந்த விவரமும் என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி போட்டால், அதற்கு வேண்டிய பதிலைத் தயாரித்துக் கொடுக்க முயற்சி செய்யப்படும். யாரோ சம்மந்தப்பட்ட அதிகாரிகள் பயப்படுகிறார்கள் என்பது சரியல்ல. ஏதாவது குறைபாடுகள் தெரிந்தால், அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. ப. உ. சண்முகம் : ஸார், தாசில்தார் கொடுக்கும் பர்மிட்டுக்கு சில்லரை வியாபாரிகள் செமண்ட் ஸ்டாக் இல்லை என்று சொல்கிறார்கள் என்ற புகார் வந்ததா? அப்படியென்றால், அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. வெ. ராமையா : அதைப் பற்றி புகார் எனக்கு வரவில்லை. என்ன புகார் என்று தெரிந்ததும், அதைப் பரிசீலனை செய்து, என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யோசிக்கப்படும்.

7th August 1963]

திருமதி சி. குழந்தை அம்மாள் : தலைவர் அவர்களே, ஒரு மூட்டை செமண்டை வாங்கி, அதோடு களிமண், அரப்பு இவற்றைக் கலந்து விற்பனை செய்கிறார்கள். ஆகவே, பாக்டரியி லிருந்து வரும்போதே, அரசாங்க முத்திரையிட்டு, விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : இப்பொழுது இருக்கும் புகார் களை கனம் அங்கத்தினர் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அவைகளைத் தடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : ஸார், கட்டிடம் கட்டாமலேயே செமெண்டு வாங்கி விற்பனைச் செய்யும் வியாபாரத்தைத் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுப்பதாக உத்தேசம் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : என்னிடத்தில் புகார் இல்லா மலே நடவடிக்கை எடுப்பது என்பது முடியாதது. கனம் அங்கத்தினர் கட்டடத்திற்காக வாங்கிய செமண்டை கட்டடம் கட்டாமலேயே விற்பனை செய்கிறார்கள் என்ற தவறான காரி யத்தை அரசாங்கத்தின் அல்லது அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யோசிக்கலாம். தவறு தெரியாமலேயே "என்ன நடவடிக்கை என்றால்", பதில் சொல்ல முடியாது. "ஹைபாதெடிகல் க்வெஸ்சின்" போட்டால், அதற்கு பதில் சொல்ல முடியாது.

திரு. ஆ. துரையரசன் : தலைவர் அவர்களே, வட்டார வாரியாக உள்ள ஏஜண்டுகள் சிமெண்ட் டிபாசிட் தொகை செலுத்தியும் காலதாமதம் கம்பெனிகளில் ஏற்படுத்துவதாக அறி விக்கிறார்களே அதன்மீது நடவடிக்கை எடுக்க இனிமேலாவது அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. வெ. ராமையா : இந்தப் புகார் முதலாக இப் பொழுது சட்ட சபையில்தான் கனம் அங்கத்தினர் சொல்லுகிறார் கள். அதை எழுதி அனுப்பியிருந்தால், அதைத் தடை செய்ய முயற்சி எடுத்திருக்க முடியும். ஒவ்வொரு கனம் அங்கத்தினரும் தங்கள் கவனத்திற்கு வந்திருக்கும் குறைகளை சட்டசபையில் உப கேள்வியாகப் போட்டால், தக்க பதில் கொடுக்கக் கஷ்டமாகத் தான் இருக்கிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : ஸார், தணிக்கை செய்யும் அதிகாரம் ரெவின்யூ அதிகாரிகளிடம் இருக்கிறது. நான்-அபிஷலான, பஞ்சாயத்து யூனியன் சேர்மன் அவர்களுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்தால், கொஞ்சம் தவறுகள் குறை யலாம் என்ற அபிப்பிராயம் சர்க்காருக்கு இருக்கிறதா ? (சிரிப்பு).

கனம் திரு. வெ. ராமையா : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் கேட்ட உடனேயே சபையில் எல்லோருக்கும் சிரிப்பு வந்தது. (குறுக்கீடு). பலபேருக்கு பல காரணம் இருக்

கலாம். இப்பொழுது இருக்கும் முறையிலேயே தவறுகளை ரெவின்யூ அதிகாரிகள் அல்லது சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வந்தால், எல்லோருமே ஒன்று சேர்ந்து முயற்சி எடுக்கலாம். அதை விட்டு பஞ்சாயத்து யூனியனுக்கு அதிகாரம் கொடுப்பதால் நலம் ஒன்றும் இல்லை.

திரு. வை. சங்கரன் : சபாநாயகர் அவர்களே, யார் யாருக்கு எந்த எந்த காரியத்திற்கு எவ்வெப்பொழுது எவ்வளவு செமண்ட் கொடுக்கப்படுகிறது என்ற பட்டியலை பொதுமக்கள் பார்க்கக் கூடிய நிலையில் வைத்தால், விவரமாக எல்லோரும் தெரிந்து கொள்ள முடியும். இம்மாதிரியான கோளாறுகள், குறைபாடுகள் வராமல் பார்த்துக்கொள்ள முடியும். அம்மாதிரிச் செய்ய சர்க்கார் முன் வருவார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நாம் பட்டியல் வைக்க வேண்டிய அவசியம் இல்லை; பொதுமக்கள் இதுபற்றி பல ரூபத்தில் நன்றாகத் தெரிந்து கொண்டு இருக்கிறார்கள். தவறுகள் நடந்தால், புகார்களை அரசாங்கத்திற்கு நேரிடையாகத் தெரிவிக்க வேண்டும்.

9-00 a.m. **திரு. மீ. கலியாணசுந்தரம் :** ஸார், அமைச்சர் அவர்கள் விநியோகம் எப்படி நடக்கிறது என்பதை இன்னும் சரியாக ஊன்றி கவனிக்கவில்லையோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ரெவின்யூ இலாகா விநியோகம் செய்வதாகச் சொல்லவில்லை. ரெவின்யூ இலாகாவில் கொடுக்கும் காகிதத்தை நீடெயில் டீலரிடம் கொண்டு போனால் ஸ்டாக் இருப்பதில்லை. இந்தக் குறையை நிவர்த்திக்க என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்று அறியலாமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்போது இருக்கக்கூடிய முறையில் சிமெண்ட் மூட்டையைத் தூக்கிக் கொடுப்பது வியாபாரி தான். ரெவின்யூ இலாகாவில் கொடுப்பதாகச் சொல்லவில்லை. அந்தப் பகுதிக்கு எவ்வளவு சிமெண்ட் அனுப்புகிறோம் என்பதெல்லாம் ரெவின்யூ இலாகாவிற்குத்தான் தெரியும். யாருக்குத் தேவை என்று பார்த்து நிர்ணயம் செய்யும் பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. அங்கே அவர்கள் பலவித வழிகளைப் பின் பற்றுகிறார்கள். அநேகமாக ஃபர்ஸ்ட் கம் ஃபர்ஸ்ட் ஸர்வ்ட் என்ற முறையில் நடைபெறுகிறது. சில இடங்களில் தக்க ப்ளான் எல்லாவற்றையும் கவனித்துச் செய்யவேண்டியிருக்கிறது. இதிலெல்லாம் குற்றம் குறைகளைக் குறைக்க என்ன நடவடிக்கை எடுக்கிறோமோ அதற்கு மாற்று வழிகளைக் கண்டு பிடித்து விடுகிறார்கள். ஆகையால்தான் பொது மக்கள் ஒத்துழைப்பு அதிகமாக வேண்டும் என்று சொன்னேன்.

திரு. கே. பொன்னையா : தலைவர் அவர்களே, நமது நாட்டில் ஏறக்குறைய 1,000, 2,000 வருஷங்களுக்கு முன்பு பெரிய, பெரிய ஆலயங்கள் காரை களிமண்ணால் கட்டப்பட்டிருக்கின்றன. இன்றைக்கும் என்ஜினீயர்கள் பாலங்கள் அணைகள் எல்லாவற்றையும் முழு களிமண்ணை உபயோகித்துக் கட்டியிருக்கிறார்கள்.

7th August 1963]

நாமும் சிமெண்டுக்கு பதில் காரை, களிமண்ணை உபயோகித்துக் கட்டடங்களைக் கட்டுவதற்கு முயற்சி எடுக்கக் கூடாதா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன் அல்ல, சமீபத்திலேயே செட்டி நாட்டுப் பகுதியில் ஏராளமான வீடுகள் சிமெண்ட் இல்லாமல் கட்டப்பட்டிருக்கின்றன. அதை பி.டபிள்யூ. இலாகா அதிகாரிகள் பார்த்து, கிடைக்கக்கூடிய பொருள்களைப் பயன்படுத்த முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் பேரில், பி.டபிள்யூ.டி. பஞ்சாயத்து யூனியன் கட்டடங்கள் எல்லாவற்றையும் சிமெண்ட் இல்லாமலேயே கட்ட முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதிலே வெற்றியும் கண்டிருக்கிறார்கள்.

திரு. வி. எஸ். எஸ். மணி : சிமெண்ட் மூட்டைகளை ஸ்டாக்கிஸ்ட்டுகள் எடுக்கத் தயங்குகிறார்கள் என்ற குறைபாடு இருக்கிறது. அவர்கள் கொடுத்துள்ள டெபாஸிட் தொகையான 5,000 ரூபாய்க்கு வட்டிக்குக்கூட கட்டவில்லை என்று சொல்லப்படுகிறது. மார்ஜின் ஆஃப் ப்ராஃபிட் குறைவாக இருக்கிற காரணத்தினால் அந்த விதமாகத் தயங்குகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதைக் கூட்டுவதற்கு ஏதாவது வழிவகை செய்யும் உத்தேசம் உண்டா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : அதைப்போல புகார்கள் என் பார்வைக்கு வரவில்லை.

திரு. மூ. சண்முகம் : சிமெண்ட் கட்டுப்பாடுத் திட்டம் பொதுவாக ப்ளாக் மார்க்கெட்டில் விற்பனை செய்வதற்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடியதாக இருந்து வருவதாகப் பொது மக்கள் அபிப்பிராயப்படுவதால், இந்தக் கட்டுப்பாட்டை எடுத்துவிட்டு, அத்தியாவசியமான வேலைகளுக்கு வேண்டிய சிமெண்டை ஒதுக்கிவிட்டு மீதியை ஓபன் மார்க்கெட்டில் விட்டுவிடுவது நல்லது என்பதை அரசாங்கம் கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : ஓபன் மார்க்கெட்டில் விட்டுவிட்டால், அதனால் ஏற்படும் குறைபாடுகள் இப்போது இருப்பதைவிட அதிகமாக இருக்கும் என்று பொதுமக்கள் உணருகிறார்கள். ஓபன் மார்க்கெட்டில் விட்டு விட்டால் பெரியவர்களுக்குத்தான் போகும். சிறிய விவசாயிகளுக்கு, சிறிய வீடுகள் கட்டுகிறவர்களுக்கு அந்த சிமெண்ட் கிடைக்காது. இப்போது இருக்கக்கூடிய முறையில் குறைபாடுகள் இருந்தாலும் ஓபன் மார்க்கெட்டுக்கு விட்டுவிடக் கூடாது. கண்ட்ரோலை எடுத்து விடக்கூடாது என்பது பொது மக்கள் அபிப்பிராயம்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : இந்த தணிக்கை வினியோகம் ரெவின்யூ அதிகாரிகளிடம் இருப்பதால் சில தவறுகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆகையால் நான்-அஃபிஷல்ஸுக்கு தணிக்கைப் பொறுப்பைக் கொடுத்தால் குறைகளை நிவர்த்தி செய்யலாம் என்பதை அரசாங்கம் யோசிக்குமா?

கனம் திரு. வெ. ராமையா : இப்போது இருக்கக்கூடிய முறையே நல்லது என்பது அரசாங்கத்தின் நினைப்பு.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, ஏஜெண்டுகள் மூலமாக வினியோகிப்பதால்தான் கள்ள மார்க்கெட் வளருகின்றது. கூட்டுறவு சங்கங்களுக்கு இந்த வினியோக உரிமையைக் கொடுத்தால் கள்ள மார்க்கெட்டை ஒழிக்கலாம் என்பதை உணர்ந்து அவர்களுக்கு அந்த உரிமையைக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : இப்போது இருக்கக்கூடிய ஏஜெண்டுகள் முறை சரியாக இல்லை என்று வேறு வழிகள் கண்டு பிடிக்கவேண்டுமென்றால் அதையும் பரிசீலனை செய்யலாம்.

Pharmacists (training)

* 29 Q.—SRI K. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to give short course training to Pharmacists for placing them in charge of Rural Dispensaries until qualified Doctors are available; and

(b) if so, the details thereof?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) No.

(b) Does not arise.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இல்லை.

(இ) எழாது.

திரு. ரா. சு. வீரப்பச் செட்டியார் : கிராமப் புறங்களில் மருத்துவ வசதி மிகவும் குறைவாக இருப்பதால், இவற்றிற்கான ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன் வரவில்லை என்றால், கிராமப்புற மருத்துவ வசதிக்கு என்ன ஏற்பாடு செய்ய இருக்கிறார்கள் என்று அறியலாமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கிராமப்புறங்களில் என்ன மருத்துவ வசதி செய்யவேண்டுமோ, அவைகளையெல்லாம் செய்து கொண்டுதான் வருகிறார்கள். ஃபார்மஸிஸ்ட் சம்பந்தப்பட்ட மட்டில் அது இப்போது அரசாங்கத்தின் பரிசிலனையில் இல்லை என்று சொன்னேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : தகுதி வாய்ந்த டாக்டர்கள் வேலைக்கு விண்ணப்பம் செய்திருந்தும், இதுவரையில் பல பேர்களுக்கு வேலை கிடைக்காமல் அந்த டாக்டர்களெல்லாம் சும்மா இருக்கிறார்கள் என்று அமைச்சருக்குத் தெரியுமா? அதன் பேரில் சென்னையிலிருந்து வருகிற பத்திரிகையில் எழுதப்பட்ட குறிப்பும் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.